CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஏப்ரல் 2008 மலர் 4 இதழ் 1

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## இயற்கைவழி வேளாண்மை குறித்த கலந்துரையாடல் கூட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் இயற்கைவழி வேளாண்மை குறித்த கலந்துரையாடல் கூட்டங்களை தமிழ்நாட்டில் உள்ள நான்கு மாவட்டங்களில் நடத்த திட்டமிட்டுள்ளது. இயற்கைவழி வேளாண்மையில் மேற்கொள்ளப்படும் புதிய முயற்சிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல் மற்றும் இயற்கைவழி வேளாண்மையில் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அரசாங்கம், விஞ்ஞானிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் விவசாயக் குழுக்கள் மூலம் உரிய தீர்வு காணுதல் போன்றவை இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இயற்கைவழி வேளாண்மை குறித்த முதல் கலந்துரையாடல் கூட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தப் பட்டது. இந்தக் கூட்டம் மார்ச் 25ஆம் தேதியன்று, சுக்கன் கொல்லையிலுள்ள நமது தொழிற்நுட்ப ஆதார மையத்தில் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் விஞ்ஞானிகள் உட்பட 20 பேர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பெறப்பட்ட முக்கிய கருத்துக்களாவன,

- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இயற்கைவழி வேளாண்மையைச் செயல்படுத்தி சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.
- வேளாண் விஞ்ஞானிகள் இயற்கைவழி வேளாண்மை குறித்த பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களின் ஆய்வு ஆலோசனை குழுவில் விவசாயிகளும் இடம் பெற வேண்டும்.



*சுக்கன்கொல்லைப் பண்ணையில் கூட்டத்தில் பங்கேற்றவர்கள்*

- விவசாயிகளின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வு முடிவுகளுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும்.
- தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் இயற்கைவழி விளைபொருட்களுக்கான சந்தையை மேம்படுத்த வேண்டும்.



*சமையல் போட்டியின் முடிவுகளைத் தீர்மானிக்கும் ஊழியர்கள்*

## ஆண்டு விழா கொண்டாட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் பதிமூன்றாம் ஆண்டு விழா ஜனவரி 23ஆம் தேதியன்று, சுக்கன்கொல்லை பண்ணையிலுள்ள தொழிற்நுட்ப ஆதார மையத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டு விழா கொண்டாட்டத்தின்போது, சமையல் போட்டி, வினாடி - வினா, குறுக்கெழுத்து போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், மையத்தின் செயல்பாடுகள், வளர்ச்சிகள் மற்றும் எதிர்கால நோக்கங்கள் குறித்து மையத்தின் இயக்குனர் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் உரையாற்றினார். இதைத் தொடர்ந்து, பல்வேறு போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு ஆண்டு விழா கொண்டாட்டம் இனிதே நிறைவடைந்தது.



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டம் - II**

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் நமது மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலிருந்து சுமார் 210.63 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தில், சுமார் 138.73 ஹெக்டேர் நிலத்தில் இயற்கைவழி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை,திண்டுக்கல் மற்றும்நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு சுமார் 54 பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சிகளில் சுமார் 687 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில், இயற்கைவழி வேளாண்மையின் முக்கியத்துவம் அகத் தரநிர்ணயங்கள், தாவரக் கரைசல் தயாரிப்பு முறைகள், இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள், விதை உற்பத்தி மற்றும் தீவனப் பயிர் சாகுபடி குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பிப்ரவரி 8 மற்றும் 11ஆம் தேதிகளில், சித்திவிநாயகபுரம் மற்றும் பாகசாலை கிராமப் பயனீட்டாளர்களுக்கு முறையே "இயற்கைவழி வேளாண் சான்றிதழ் குறித்த விழிப்புணர்வு" மற்றும் "இயற்கைவழி காய்கறிச் சாகுபடி" என்ற தலைப்புகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, திண்டுக்கல்லில் உள்ள சிம்கோடஸ் (SIMCODESS) என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை தொழிற்நுட்பங்கள் குறித்து நான்கு நாள் பயிற்சி முகாம் மார்ச் 13 - 16ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன. மார்ச் 18ஆம் தேதியன்று, திண்டுக்கல் மாவட்டப் பயனீட்டாளர்கள் கலியப் பேட்டை மற்றும் சித்திரவாடி கிராமங்களிலுள்ள இயற்கை வேளாண் வயல்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெளுக்கம்பட்டு கிராமத்தில் எண்ணெய் செக்கு ஆலையின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

**உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மைத் திட்டம்**

புதுதில்லியிலுள்ள கபார்ட் (CAPART) நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம், மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கிராமங்களிலும் சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தக் கூட்டங்களில் இயற்கை வேளாண்மை செயல்முறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இயற்கை வேளாண் சங்கங்களின் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டன. நரப்பாக்கம் மற்றும் திருவானைக்கோயில் கிராமங்களிலுள்ள விதை வங்கிகளின் பதிவேடுகளும் சரிபார்க்கப்பட்டன. எடையூர், நரப்பாக்கம் மற்றும் கோரப்பட்டு கிராமங்களில் இயற்கைவழி நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை**

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (HIVOS) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி மற்றும் கலியப்பேட்டை கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மண் பரிசோதனை கூடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து விட்டன. மேலும், தேவையான உபகரணங்கள் அனைத்தும் வாங்கப்பட்டுள்ளன. ஜனவரி 20 மற்றும் 27ஆம் தேதிகளில், கலியப்பேட்டை மற்றும் கொளத்தாஞ்சேரி கிராமப் பயனீட்டாளர்களுக்கு, ஒற்றை நாற்று முறை நெல் சாகுபடி குறித்து இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் "வியாபார ரீதியிலான விதை உற்பத்திக்கான வழிமுறைகள்" என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்று பிப்ரவரி 12 - 14ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. இதில் நமது மையத்தின் பத்து தொழில்நுட்ப ஊழியர்கள் கலந்து கொண்டனர். பிப்ரவரி 22 மற்றும் 23ஆம் தேதிகளில், இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகள் திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி கிராமத்திலுள்ள திரு. அந்தோணிசாமி அவர்களின் இயற்கை வேளாண் பண்ணைக்கு அழைத்து செல்லப்பட்டனர். இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பிப்ரவரி 23 - 25ஆம் தேதிகளில் காந்திகிராம பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத் துறை பேராசிரியர் டாக்டர் நாராயணசாமி அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது.

**தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்**

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை சீர்காழியில் செப்டம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. ஆய்வகத்தில், வேப்ப எண்ணெய் சோப்பு கரைசல், *ஆடாதோடை ஷாரம்* மற்றும் பூண்டு, இஞ்சி, பச்சை மிளகாய் கரைசலைப் பயன்படுத்தி அசுவுணிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பயிர்களில் காணப்படும் படைப்புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜனவரி 21ஆம் தேதியன்று, தாவரக் கரைசல் மற்றும் மண்புழு உரத் தயாரிப்பு முறைகள் குறித்து பயிற்சி முகாம் ஒன்று திருவாரூரில் உள்ள ஸ்கார்ட் (SCORD) நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமில் 34 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 54 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**காம்பாஸ் திட்டம் - II**

இந்தத் திட்டம் காம்பாஸ் நிறுவனத்தின் உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தீவனப் பயிர் சாகுபடிக்காக சுமார் 10 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், தீவனப்பயிர் நாற்றாங்கால் அமைப்பதற்காக இரண்டு கிராமங்களில் சுமார் இரண்டு ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கத்தரியில் பசும்பாலை பயன்படுத்தி விதை முளைப்பு திறனைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய நெல் ரகங்களின் புற மற்றும் இயற்வேதி பண்புகளை மதிப்பீடு செய்யும் முறைகள் குறித்த ஆய்வறிக்கை ஒன்று அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஆனந்தன் அவர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. "பாரம்பரிய நெல் ரகங்களின் பண்புகளைப் பதிவு செய்யும் முறைகள்" என்ற தலைப்பில் விவசாயிகள் மற்றும் நமது மையத்தின் பணியாளர்களுக்கு அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பயிர் இனப்பெருக்கவியல் மற்றும் மரபியல் துறையின் பேராசிரியர்கள் டாக்டர் ஆனந்தன் மற்றும் டாக்டர் சபேசன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். பிப்ரவரி 20 - 22ஆம் தேதிகளில், நான்கு விவசாயிகள் கர்நாடக மாநிலத்திலுள்ள க்ருஷி பிரயோக் பரிவார் (KPP) நிறுவனத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். காஞ்சிபுரம் கிராமப் பயனீட்டாளர்களுக்கு, "இயற்கை விவசாயத்திலுள்ள பிரச்சினைகளும் அதற்குரிய தீர்வுகளும்" என்ற தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம் மார்ச் 25ஆம் தேதியன்று, சுக்கன்கொல்லையில் நடத்தப்பட்டது. மார்ச் 22 - 25ஆம் தேதிகளில், "ஜீரோ பட்ஜெட் வேளாண்மை" என்ற தலைப்பில் பயிற்சி முகாம்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

கோயமுத்தூரில் நடத்தப்பட்டது. இதில், நமது திட்டத்தின் கீழுள்ள இரண்டு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கைவழி காய்கறிச் சாகுபடி திட்டம்

நமது மையம் மும்பையிலுள்ள சர் ரத்தன் டாடா டிரஸ்டின் உதவியுடன் ''விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இயற்கைவழி காய்கறிச் சாகுபடி'' என்னும் திட்டத்தை திண்டுக்கல் மாவட்டத்தில் பாசன வசதியுள்ள பகுதிகளில் நவம்பர் 2007 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மூன்று கிராமங்களிலிருந்து சுமார் 30 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனீட்டாளர்களுக்கு திட்டத்தின் செயல்முறைகள் குறித்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. மொத்தம் 8.09 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, தக்காளி, கத்தரி, வெண்டை, சுரைக்காய், மிளகாய், மக்காசோளம், சூரியகாந்தி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

### தொழில்நுட்ப ஆதார மையத்தின் செயல் பாடுகள்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப ஆதார மையம் (Technology Resource Centre) அக்டோபர் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் செயல்பத்தப்பட்டு வருகிறது. சித்திரவாடி மற்றும் கொளத்தாஞ்சேரி கிராமங்களிலிருந்து புதிய பயனீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்களில் அக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பிப்ரவரி 8 மற்றும் 9ஆம் தேதிகளில், வேப்பம்பட்டு கிராமப் பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி நெல் மற்றும் நிலக்கடலை சாகுபடி, பூச்சி நோய் மேலாண்மை மற்றும் இயற்கைவழி வீட்டுக் காய்கறி தோட்டம் அமைத்தல் குறித்து இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில் வாழை, சணப்பை மற்றும் தீவனப்புல் போன்றவை பயிர் செய்யப்பட்டுள்ளன. சென்ற பருவத்தில் பயிர் செய்யப்பட்டிருந்த பாரம்பரிய நெல் ரகங்கள் அறுவடை செய்யப்பட்டுவிட்டன. ''வேப்பம் பிண்ணாக்கைப் பயன்படுத்துவதால் மண்புழுக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்'' மற்றும் ''தாவர வளர்ச்சி ஊக்கிகளின் செயல்பாட்டை வெங்காயத்தில் சோதித்து கண்டறிதல்'' என்ற இரண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சென்னையில் நடைபெற்ற பயிற்சி

ஜனவரி 5 மற்றும் 6ஆம் தேதிகளில், ''மண்ணின் தன்மைகளைப் புரிந்துகொள்ளுதல்'' என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிற்சி மையத்தின் சென்னை அலுவலகத்தில் நடத்தப்பட்டது. இதில் மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சியை புதுக் கல்லூரியின் (New College) உயிரித் தொழிற்நுட்பவியல் துறையின் தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் சுல்தான் இஸ்மாயில் அவர்களும், டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரியின் நுண்ணுயிரியியல் துறையின் விரிவுரையாளர் திருமதி. தாட்சாயிணி அவர்களும் நடத்தினர். இதில், மண்ணின் அமைப்பு மற்றும் வகைகள், மண் நுண்ணுயிரியியல், நுண்ணூட்ட சத்துக்களின் சுழற்சி மற்றும் மண்ணில் காணப்படும் பூச்சியினங்கள் மற்றும் மண்புழுக்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

### விதை உற்பத்தி குறித்த பயிற்சி

கோயமுத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ''வியாபார ரீதியிலான விதை உற்பத்திக்கான வழிமுறைகள்'' என்ற தலைப்பில் பயிற்சி முகாம் ஒன்று பிப்ரவரி 12-14ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமில் நமது மையத்தின் செங்கல்பட்டு மற்றும் சீர்காழி அலுவலக தொழில்நுட்ப பணியாளர்கள் பத்து பேர் கலந்து கொண்டனர். இதில், ஆதார விதைகள், வல்லுனர் விதைகள் மற்றும் சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் விதைகளைக் கடினப்படுத்துதல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

### கண் தானம் பற்றிய சொற்பொழிவு

பிப்ரவரி 21ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள சங்கர நேத்ராலயா மையத்தின் மருத்துவ சமூகயியல் துறை யின் தலைவர் திரு. ஏ.பி. இருங்கோவேள், அவர்கள் நமது சென்னை அலுவலகத்தில் கண் பாதுகாப்பு மற்றும் கண் தானம் குறித்து உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், நமது மையத்தின் சென்னை அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இதில், இந்தியாவில் காணப்படும் பார்வையின்மைக்கான காரணங்கள், கண் தானம் மூலம் சரி செய்யப்படக்கூடிய பார்வையின்மை கோளாறுகள் மற்றும் கண் தானம் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விளக்கப்பட்டது.

### தொழில்நுட்ப ஆதார மையக் கூட்டம்

இந்திய அரசின் கபார்ட் (CAPART) நிறுவனம், இந்தியாவில் மொத்தம் 23 நிறுவனங்களை தொழில்நுட்ப ஆதார மையங்களாகத் தேர்வு செய்துள்ளது. இந்தத் தொழில்நுட்ப ஆதார மையங்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யும் பணியில் கபார்ட் நிறுவனம் தற்போது ஈடுப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க தென் மண்டல தொழில்நுட்ப ஆதார மையங்களுக்கான மதிப்பீட்டு கூட்டம் மார்ச் 17ஆம் தேதியன்று சென்னையிலுள்ள சி.ஐ.கே.எஸ். அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கபார்ட் நிறுவனத்தின் தலைமை இயக்குனர் திரு.எம்.எஸ். டிசேல்பின் அவர்களும் கிராமத் தொழில்நுட்பப் பிரிவின் இயக்குனர் திரு. பி.என். ஸ்ரீநிவாசன் அவர்களும், ஹைதராபாத்திலுள்ள தென் மண்டல அலுவலகத்தின் உறுப்பினர் செயலாளர் திரு. எல்.பி. சிங் அவர்களும், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களிலுள்ள தொழில் நுட்ப ஆதார மையங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதில், தொழில்நுட்ப ஆதார மையங்களின் செயல்பாடுகள், கபார்ட் நிறுவனத்துடனான உறவை மேம்படுத்துதல் மற்றும் ஆதார மையங்களுக்கிடையே தொடர்பை உருவாக்குதல் குறித்து விவாதிக்கப்பட்டது.

### விற்பனைக்கு தயாராக உள்ள இயற்கைவழி விளைபொருட்கள்

| வ. எண். | இயற்கைவழி உணவுப் பொருட்கள் | ரூ./கி. |
|---|---|---|
| 1. | பச்சரிசி | 30/- |
| 2. | புழுங்கல் அரிசி | 28/- |
| 3. | இட்லி அரிசி | 21/- |
| 4. | கொண்டைக்கடலை | 65/- |
| 5. | பொட்டுக்கடலை | 75/- |
| 6. | நிலக்கடலை | 50/- |
| 7. | கடலை மிட்டாய் | 160/- |
| 8. | கடலை எண்ணெய் / லி. | 135/- |
| 9. | நல்லெண்ணெய் / லி. | 135/- |
| 10. | வெல்லம் | 35/- |
| 11. | அவல் | 42/- |
| 12. | தேங்காய் (ஒன்று) | 7/- |
| 13. | செவ்வாழை (ஒன்று) | 5/- |
| 14. | மண்புழு உரம் | 10/- |

மேற்கண்ட உணவுப் பொருட்களை வாங்க விரும்புவோர் 2743 0625 / 2743 1971 மற்றும் 99427 96303 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் (அ) ciksfo@gmail.com / samyciks1@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

# புத்தகங்களும் வீடியோ படங்களும்

### இயற்கைவழி சாகுபடி தொழில்நுட்பங்கள் - தக்காளி, கத்தரி, வெண்டை மற்றும் மிளகாய் (ஆங்கிலம் மற்றும் இந்தி)




இந்தப் புத்தகத்தில், தமிழ்நாட்டில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் காய்கறிகளான தக்காளி, கத்தரி, வெண்டை மற்றும் மிளகாயை பாதிக்கக்கூடிய முக்கிய பூச்சிகள் மற்றும் நோய்கள் பற்றியும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான இயற்கைவழி மேலாண்மை முறைகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு தாவரக் கரைசல்கள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகளைத் தயாரிக்கும் முறைகள் பற்றியும், இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள் பற்றியும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது.

### இயற்கைவழி தீவனப் பயிர் சாகுபடி



இந்தப் புத்தகத்தில் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் முக்கிய தீவனப் பயிர்களை இயற்கைவழியில் சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

### இயற்கைவழி உணவு




இந்தப் புத்தகத்தில் இயற்கைவழி உணவு பற்றிய அடிப்படைத் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இயற்கைவழி உணவு பற்றிய பல தவறான கருத்துக்கள் மற்றும் இயற்கைவழி உணவு பற்றிய பல சந்தேகங்களுக்கு எளிதில் புரியக்கூடிய விதத்தில் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டில், இயற்கைவழி உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடங்களைப் பற்றிய விவரங்களும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகங்களைப் பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தைத் தொடர்பு கொள்ளவும்.

# வருகையாளர் பதிவேடு

- *ஜனவரி 11ஆம் தேதியன்று, டென்மார்க்கில் உள்ள இயற்கைவழி உணவு மற்றும் வேளாண்மைக்கான டேனிஷ் ஆய்வு மையத்தின் தலைவர் டாக்டர் நெயில்ஸ் ஹால்பர்க் அவர்களும், ஆய்வாளர் திரு. பன்னீர் செல்வம் அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஜனவரி 12ஆம் தேதியன்று, திருமதி. ஷீலா ராணி. இ.ஆ.ப. அவர்களும், திருமதி. ராதா நாராயணன் அவர்களும் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *ஜனவரி 26ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் ஆனந்தன் அவர்களும் திருமதி சங்கீதா அவர்களும் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *ஜனவரி 26 மற்றும் 28ஆம் தேதிகளில், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ட்ரைபல் ஹெல்த் இனிஸியேட்டிவ் (Tribal Health Initiative) நிறுவனத்தைச் சேர்ந்த விவசாயிகள் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *ஜனவரி 29ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க துறையைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சீர்காழி, அகணி கிராமத்திலுள்ள தாவரக்கரைசல் தயாரிப்பகத்திற்கும், ஆய்வுப் பண்ணைக்கும் வந்திருந்தனர்.*
- *பிப்ரவரி 1ஆம் தேதியன்று, காந்திகிராம் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு துறையின் பேராசிரியர் டாக்டர் டி.டி. ரங்கநாதன் அவர்கள் வந்திருந்தார்.*
- *பிப்ரவரி 13ஆம் தேதியன்று, கன்னியாகுமரியிலுள்ள நார்டெப் (NARDEP) நிறுவனத்தின் செயலாளர் திரு. வாசுதேவ்ஜி அவர்கள் வந்திருந்தார்.*
- *பிப்ரவரி 26ஆம் தேதியன்று, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரவியல் துறையின் பேராசிரியர் டாக்டர் சுந்தரவரதராஜன் அவர்கள் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தார்.*
- *மார்ச் 1 - 3ஆம் தேதிகளில், அமெரிக்காவிலுள்ள க்னெக்டிகட் பல்கலைக்கழகத்தின், மானுடவியல் துறையின் மாணவி செல்வி. அன்னா மேரி நிக்கோலேசன் அவர்கள் நமது மையத்தின் சீர்காழி அலுவலகத்திற்கு வந்திருந்தார்.*
- *மார்ச் 3ஆம் தேதியன்று, மைசூரிலுள்ள இந்திய மானுடவியல் தகவல் மையத்தின் தென் மண்டல உதவி மானுடவியலாளர் திரு. சி. ரகு அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *மார்ச் 17ஆம் தேதியன்று, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழனியூர் மற்றும் தர்மதுப்பட்டி கிராம விவசாயிகள் 13 பேர் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தனர்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**